# கவிஞர் இரா.ரவியின் ஹைக்கூ கவிதைகள் – பெண் சமூகம்

*அ. மரியநேசம்*
பதிவு எண் - 22212014022009, முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி

*முனைவர் ச. மல்லிகா*
பதிவு எண் - 22212014022009
நெறியாளர் & இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தமிழாய்வு மையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6432

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்புடையது, முப்பது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து அமைந்து அறம் புரிந்து அல்லவை நீக்கக்கற்றுத் தருவது எல்லாமும் மனதுள் கொள்ளத்தகும் சிறந்த அறிவுரைகளை வழங்கி வருவது தெளிந்த நல்அறிவு பெற்ற கவிஞர்களால் படப்பட்டம் இலக்கியம் கற்பதால் பெரும் பயன்விளைகிறது. காலத்திற்கேற்ப பாக்களிலும் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் மாற்றம் கொண்டு வெவ்வாறு வளர்த்துள்ள என்பதை அறிவதில் இன்பம் உண்டும் சங்ககாலத்தில் காதலையும் வீரத்தையும் பட அகவற்பாவில் பாடினார்கள். அறக் கொள்கையை நிலை நாட்ட நீதி இலக்கியங்கள் தோன்றியபோது படித்தவுடன் மனதில் பதியும் எளிய யாப்பு வடிவமான வெண்பா பயன்பட்டது. சமயக் கருத்துக்கள் பாசுரங்வகளிலும் தேவாரப்பாடல்களிலும் இடம் பெற்றன. மறுமலர்சசி'க்காலத்தில் சொல் புதிது பொருள்புதிது சோதி மிக்க நவ கவிதை எனப்புதுக்கவிதைகள் வெளிவந்தன. எதுகையும் மோனையும் சீரும்கீரும் சுத்தச் சனியன்கள் என யாப்பு என்ற கரையை உடைத்துக்கொண்டு வரும் உணர்ச்சிவெள்ளமே புதுக்கவிதை என்றனர். தற்போது சுருக்கச் சொல்லி விளங்க வைக்கும் மூன்று வரிக்கவிதையான ஹக்கூ கவிதைகள் தோற்றம்பெற்று பெரிதும் வளர்த்து வருகிறது. இமைப்பொழுதும் சேராமல் ஹைக்கூ கவிதை எழுதுவதில் சி றந்து விளங்குபவர் கவிஞர் இரா.ரவி சமுக அநீதிகளை நெஞ்சுரத்துடன் எடுத்துரைப்பவர். அவரின் ஹைக்கூ கவிதைகளில் பெண்களின் நிலையைக்காண்பதாக இவ்வாய்வு அமைகிறது.*

**முன்னுரை**

கவிதைக்கான மரபுகளைப் பின்பற்றி வரும்போது அம்மரபுகள் போதாத நிலையில் புதிய மரபுகள் தோன்றி அக்காலத்தின் தேவைகளை நிறைவு செய்வது தவிர்க்க முடியாத வராயிந்து நியதியாக இருந்து வருகிறது. ஹைக்கூ மரபும் அத்தகையதே என்பது அறிஞர் கருத்து. மிகக் குறைந்த சொற்களைக் கொண்டு நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிக கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

சிறிய எண்ணிக்கையிலான சொற்களைப் பயன்படுத்தி எழுத முடியும் என்பதால் கவிஞர்கள் இணையத்திலும் வார இதழ்களாலும் ஹைக்கூ கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஹைக்கூ கவிதை போட்டியில் பெண்களுக்கான கல்வி, தாய்மை, பெண் சிசுக்கொலை, விளையாட்டு என்ற தலங்களை கவிதைகளைப் புனைந்து வெற்றி கவிதைகளைத் தந்துள்ளார் ஆசிரியர் அதனை காண்பதாக இவ்வாய்ப்பு அமைகிறது.

## ஹைக்கூ கவிதை விளக்கம

ஐக்கூ – கைக்கூ அல்லது ஹைக்கூ மூன்று வரிகளால் முறையே ஐந்து, ஏழு, ஐந்து அசைகள் என 17 அசைகளை கொண்டு அமைக்கப் பெறும் இயைபற்ற ஐப்பானியக் கவிதை வடிவம் 17 ஆம் நூற்றாண்டில் பாசோ இதனை மேலும் மெருகூட்டினார். அதனால் இவ்வடிவம் தனித்தன்மை யடைந்து வருகின்றது. தமிழில் ஐகூ + ஐக்கூ ஐ = கடுகு உ = உலகம் கடுகு போல சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துக்களை செறிவுடன் செறிந்து வைக்கச்செப்பு போல் இடம் தரும் கவிதை வடிவம் ஐக்கூ எனப்பொருள் கூறுவர் மணமகனே மருமகளே! வா வா உன் வலது காலை எடுத்து வைத்து வா வா என்ற பெண் அழைப்பிற்காக மணமகளை வரவேற்றும் பாடலும்,

**"வலது கால் இடது கால்
வேண்டாம் வேற்றுமை
இரண்டும் நம் காலே!"[1]**

என பதிலளிக்கின்றார். கவிஞர் இரா. ரவி இரண்டு கால்களும் நம் உடம்பில் தான் உள்ளன அதனை வேறுபடுத்திக்கூறு போடுவது அழகல்ல அறியாமை எனப்பாடுகின்றார். ஜப்பானில் மாணவர்களுக்குப் பள்ளியில் இரண்டு கைகளாலும் எழுதக் கற்பிக்கின்றனர். அதனால் விரைவாகக் கற்றுக்கொண்டு முன்னேறுகின்றார்கள் நாம மட்டும் தான் வலது இடது என்று இடையுறு செய்து கொண்டிருக்கிறோம் இதனை விடுத்து முன்னேற்றுவதற்குரிய வழியைக் கற்று கொடுக்கிறது என்கிறார்.

## பெண் கல்வி

வாழ்வின் அடிப்படை தேவை கல்வி மனிதனை மாந்தராக்குவது கல்வி கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு இக்கல்வி பெண்களுக்கு மறுக்கப்பட்டது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பதற்கு என்ற நிலை மாறி எல்லா பெண்களும் படிக்க வேண்டும் என்ற நிலை உருவாகி வருகிறது என்று இரா. ரவி பெண் கல்வியை ஆதரித்து கவிதை புனைந்துள்ளார்.

**"ஆண்படித்தால் அவனுக்கு மட்டுமே நன்மை
பெண் படித்தால் இரு குடும்பத்திற்கு நன்மை"[2]**

என்ற வரிகளின் பெண் கல்வியின் அவசியத்தைப் பாடியுள்ளார். ஆண் கல்வி கற்றால் அவனுக்கு மட்டுமே நன்மை பயக்கும். ஆனால் பெண் கல்வி கற்றால் அவள் சார்ந்த சமூகத்திற்கே நன்மைபயக்கும் ஏற்படும் என்கிறார். இதனைப் பாரதிதாசன்,

**"கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்
அந்நிலத்தில் புற்கள் விளைந்திடலாம்
நற் புதல்வர்கள் விளைவதில்லை"[3]**

எனப் பாடுகின்றார் பாரதிதாசன் பெண்களின் அறிவை வளர்த்தால் சமூகத்தின் பேதமை அகன்றுவதற்கும் நாட்டின் முன்னேற்றம் என்பது பெண்களையும் உள்ளடக்கியது. அறிவார்ந்த சமூகம் உருவாகக் குழந்தைகளை ஈன்று புறம் தருபவர்கள் பெண்கள் வருங்கால இந்தியாவை உருவாக்கும் நல்ல மக்கட் பேற்றினைத் தருகின்றார்கள். பாரில் நல்ல அறங்கள் வளர்வதும் பெண்களால் தான் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற நிலை மாறி எல்லாப் பெண்களும் படிக்க வேண்டும், என்ற நிலையைக் கவிஞர்கள் உருவாக்கி வருகின்றார்கள்.

## வறுமை

நம் நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டு ஆன பின்னரும் மக்களிடள்ள வறுமையை முழுமையாக ஒழிக்க முடியவில்லை உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும்

இன்றி பல லட்சம் குழந்தைகள் பள்ளி செல்லாமல்சாலையோ ஓரங்களில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். இதற்கான காரணங்களைப் பொருள்கள் ஒரு வல்லுனர்களால் மட்டுமே கண்டறிய முடியும்.

**"உலை கொதித்து**
**சோறு பொங்கி**
**உண்ண வேண்டும்"[4]**
**"கொடிது கொடிது**
**வறுமை கொடிது**
**வாடிடும் சிறுமி"[5]**
**"உதவிட யாரும் இல்லை**
**ஆதரவற்ற சிறுமி**
**அல்லல் காட்சி"[6]**

எனத் தாய் இல்லாமல் பெண்குழந்தை தலைவாரிப்புச்சூடி பாடப்புத்தகம் ஏந்தி பள்ளி செல்ல அனுப்ப தாய் இல்லாததால் அடுத்த வேலைக்கு உண்ண உணவின்றி தானே சமைத்து உண்ணும் ஆதரவற்ற சிறுமியின் துன்பத்தைக் காட்டுகின்றனர். பள்ளி செல்லாக்குழந்தைகளை ஊக்குவித்துக் காலை உணவு, மதிய உணவுத் திட்டங்களை அரசு கொண்டு வந்தாலும் குழந்தை தொழிலாளர்களை முழுமையாக ஒழிக்க முடியாத நிலை நிலவுவதனை இக்கவிதைக் காட்டுகின்றது.

## தாய்மை

பெண்ணின் மகத்துவமே தாய்மைத் தான். பெண்மை தாய்மையால் தான் முழுமையடைகிறது. பெண்ணின் மீது பாசமும் அன்பும் அளவிட முடியாத ஒன்று. பெண் குழந்தை பேறு அடைவதைத் தாய்மை என்கிறோம் அதற்குப் பத்து மாதம் கருவறையிலிருந்து சுமந்து உடலும் மனதிலும் ஏற்படும் சோர் வினையும் தாண்டி ஒவ்வொரு நிமிடமும் தன்னைத்தன் வருத்தி, தன விருப்பு, வெறுப்புகளை தம் சந்தோசத்தை மட்டும் பகிர்ந்துக்கொள்ளும் உன்னத உறவு தாய் தான். தாய்மை உணர்வின் எதிர்கொள்ளும் பெண்கள் கர்ப்பகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் கொஞ்சம் நஞ்சமல்ல ஊட்டச் சத்து குறைபாடு, தொடர்ந்து தலைச்சுற்றல், இரத்த அழுத்த பாதிப்பு, கண்வலி, மூச்சுத்திணறல் இவர்கள் அனுபவிக்கும் வேதனைகளில் சில மட்டுமே பெண்கள் கருவுற்ற முதல் வாரத்திலிருந்து குழந்தை பிறக்கும் வரை ஒரு முகமாக உறங்கி எழுந்து அசௌகரியமான நேரத்திலும் கூட குழந்தையின் ஆரோக்கியத்தினை மட்டுமே எதிர் நோக்கி வாழும் தாயின் சந்தோசமே. குழந்தையின் உயிர் மூச்சு நாடி துடிப்பினை அறிந்து கொண்டே இருந்து தாயானவள் மகிழ்ச்சியடைவதே பெரும் சிறப்பு.

கருவில் இருக்கும் சிசுவை மரணத்தின் வழியிலிருந்து பெற்று எடுக்கிறாள் அதனாலேயே பிரசவத்தை மறுஜென்மம் என்று சொல்லப் படுகிறது தன்னையே வருத்தி ஒடுக்கி பத்து மாத காலங்களிலும் மருத்துவம் சரியான மனநிலை நல்ல சுகாதாரம் எல்லா விதமான சூழ்நிலையிலும் தன் கருவைப் பாதுகாத்து பெற்றெடுக்கும் பெருமையே தாய்மை ஆகும் இந்த வலி நிறைந்த மாதங்களில் அர்ப்பணிப்புவோட இருக்கும் பெண்களை நினைக்கும் வகையில் ஏப்ரல் 11ல் தேசிய தாய்மை பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது தாய்மை நம் அனைவருக்கும் முதன்மை என்பதை மறுக்க முடியாத உண்மையாகும் இரா. ரவி தாய்மை உணர்வினைப் பற்றி கீழ்க்கண்ட வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார்

**"இரண்டு புலிகளுக்கு இரையானது**
**தன்னுயிர் தந்து**
**குட்டிகள் உயிர் காத்த**
**தாய்மையின் இரக்கம் இமயம்**
**ஈடு இணையற்ற**
**மேன்மை தாய்மை"[7]**

எனப் பாடியுள்ளார். இரண்டு புலிகளுக்குத் தாயான மான் இரையாக தன்னுள் கொடுத்து தன் குட்டி மான்களைக் காப்பாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் துளியும் கவலை இல்லாமல் இறந்து போனது. இத்தகைய மரணத்திற்கு ஈடு இணையே இல்லாமல் வாழ்ந்த தாய்மை

மேன்மையடைகிறது மேலும் கவிஞர் தாய்மைப் பற்றி சில வரிகளில்

**"அ இவில் தொடங்கும் அற்புதமாக**
**அன்னையின்றி நீயுமில்லை நானுமில்லை**
**அகிலம் இல்லை அன்பு இல்லை'[8]**
**"அன்னைக்கு இணையான உறவு உலகில் இல்லை**
**அன்னைக்கு இணை அன்னை மட்டும்"[9]**

உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் தன்னிகரற்ற நிலையில் அன்னையின் மடியிலேயே பிறக்கப்படுகிறோம் தாயில்லாமல் எவ்வுயிரும் இவ்வுலகில் பிறப்பதில்லை ஆகவேதான் அன்னைக்கு இணையாக அன்னை மட்டுமே உலகில் சிறந்தது உன்னதமானது தாயன்பு பாசமழையில் சீராட்டி பாராட்டி வளர்ப்பது தாய்மை உள்ளம் என்று கவிஞர் உணர்வுகளை விளக்கியுள்ளார். மேலும் பாரதிதாசன் வரிகளில்

**"உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்**
**அதிகாலை தொடங்கி நாம் இரவு**
**அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பில்லாமல்"[10]**

குடும்பவிளக்கு நூலில் குடும்ப பெண்ணாக இருந்தாலும்உயிரைக்கூட பொறுப்படுத்தாமல் தருவேன் என்று அயராது உழைக்கும் பெண்ணாகத் திகழ்கிறாள் தாய். அம்மையே அப்பா ஒப்பில்லா மணியே என்று இறைவனைத் தாயாகக் காண்கிறார் மாணிக்கவாசகர் ஈன்றாளோடு எண்ணக் கடவுளும் இல் என்றது கடிகை.

## பெண்சிசுக்கொலை

கருவில் இருக்கும் பெண் குழந்தையைக் கொல்வது பெண் கருக்கொலை எனவும் பிறந்தபின் கொல்வது சிசுக்கொலை எனவும் வழங்கப்படுகிறது இந்தியாவில் கிராமம் மற்றும் நகரம் என வேறுபாடின்றி இச்செயல் நடைபெறுகின்றது. ஆயினும் கிராமங்களில் இச்செயல் நடைபெறுவதாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் இது மிதமாக நடைபெறுகிறது, இந்தியாவில் பிறந்த பெண் குழந்தைகள் பரவலாக கொல்லப்படுகிறது. பெண் சிசுக்களில் இறப்பு விகிதம் ஆண் இறப்பு விகிதத்தை விட 75 விழுக்காடு அதிகமுள்ளது வளரும் நாடுகளில் சீனா, கொரியா போன்ற நாடுகளில் பரவலாக நடைபெறுகின்றது. மேலும் சமமாக இருக்கவேண்டிய பிறப்பு இறப்பு விகிதத்தில் அதிகரித்து வரும் பெண்கருக்கொலை பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் குழந்தைகளும், பெண்களும் வன் புணர்ச்சிக்கு உள்ளாவர். ஒரு பெண்ணைப்பலர் மனைவியாகப் பங்கிட்டு கொள்ளும் நிலையம் ஏற்படலாம். இச்சூழல் ஏற்படின் அது சமுதாயப் பண்பாட்டினை மதிப்பினைப் படிப்படியாகக் குறைத்து நெருக்கடி நிலை ஏற்படுத்தும்.

உலகளவில் 122 சிசு மரணங்களில் 100 பெண் சிசுவாக உள்ளது. இதனுடன் ஒப்பிடுகையில் சீனாவில் 100 சிசு கொல்லப் படுகிறது. இந்தியன் நாட்டில் 50 மில்லியன் சிறுமிகளும் பெண்களும் பெண்பால் வேற்றுமை உணரவில் கொல்லப்பட்டுள்ளனர். இதனைத் தடுப்பதர்காக தமிழ்நாட்டில் தொட்டி குழந்தை திட்டம் என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்த பட்டது பெண் சிசு கொலைப்பற்றி கவிஞர் ரவி கருத்து களின் விளிம்பினை வேண்டாம் பெண்சிசு கொலை

**"கோடி ரூபாய் கொட்டிக் கொடுத்தாலும் உங்களால்**
**கொன்றஉயிரைத்திரும்பத்தரமுடியுமா?"[11]**
**"பிறந்த குழந்தை பெண் என்றால் இரக்கமின்றிப்**
**பச்சிளம் குழந்தை வாயில் நெல்லிட்டுக்**
**கொள்ளுதல் முறையோ?"[12]**
**"கருத்தம்மா திரைப்படத்தில் இயக்குனர் இமயம்**
**கருத்து சொன்னதை எளிதில் மறந்திடலாமோ?"[13]**

என மனதுருகி வெதும்பிள்ளார். ஓர் உயிரைக் கொன்றால் மீண்டும் உருவாக்க முடியாது என்பது உண்மை. ஆனால் சமூகத்தின் மூடத்தனம் அறியாமை போன்ற செயல்களால் பெண்சிசு கொலை செய்கிறார்கள். மருத்துவச்சி மூலம் சிசுவைக்கொலை செய்தல் நெல்லை வாயிலிட்டு கொலை செய்தல் இகள்ளிப்பால் புகட்டுதல் தாறுமாற்ற செயல் வருந்தி

கவிஞர் கூறியுள்ளார். பெண் குழந்தைகள் பெற்றோரிடம் அன்பு காட்டும் மற்ற உயிரினங்கள் மேலும் பாசம் காட்டும் தன்மைக்கு கொண்டவைகள் தான். பெண் சிசுவை வெறுக்காதீர்கள்.

**"பெற்றோரை உயிருள்ள வரை நினைப்பவள் பெண்**
**பெற்றோரிடம் பாசம் நேசம் காட்டுபவள் பெண்"[14]**
**"மணமானதும் பெற்றோரை மறப்பவன் ஆண்**
**மரணம் வரையிலும் மறக்காதவள் பெண்"[15]**

என்று கவிஞர் கருத்துக்களை தெளிவுப்படக் கூறியுள்ளார் ஆண் திருமணம் முடிந்தவுடன் பெற்றோரை எந்த முதியோர் இல்லம் கொண்டு விடலாம் என்று நினைப்பவர் ஆனால் பெண் குழந்தைகள் பெற்றோருக்குப் பாசத்தை கொடுத்து எதாவது நம்மால் இயன்ற உதவிகளை செய்துகொடுப்பதும் மரணம் வரை நினைப்பவரும் பெண் தான். பெண்சிசுக்கொலை செய்யாதீர்கள் என்று வலியுறுத்தியுள்ளார்.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது வெளித்தூண்டல் களின்றி மகிழ்ச்சியுட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுவதாகும். விளையாட்டை மன மகிழ்ச்சியுட்டும் செயல் என்பர். விளையாட்டு என்பது பொழுதுப்போக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட செயல்பாடு ஆகும். விளையாட்டு சில சமயங்களில் வேலை என்பதுடன் தொடர்புடையது போல் காணப்படுகிறது. ஆனால் வேலை ஊதியத்துக்காகச் செயல்படுத்துவதும் உண்டு. விளையாட்டு ஒரு கலை என்றும் குறிப்பிடப்பட்டது உண்டு. கலை உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை இருந்தாலும், எப்போதும் இவற்றுக்கு இடையேயான எல்லைகள் தெளிவாக இருப்பதில்லை. தொழில் முறை விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு வருமானத்துக்காக ஒரு விளையாட்டாக அமைந்த்துள்ளது. ஆனால் பாரதியார் குழந்தைகளை விளையாட சொல்லுகிறார்.

**"ஓடி விளையாடு பாப்பா நீ**
**ஓய்ந்திருக்கலாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா"[16]**

எனப்பாடல் வரிகளில் நன்றாக ஓடி விளையாட வேண்டும் வீட்டுக்குள்ளேயே இருந்து ஓய்வுயெடுக்காமல் விளையாட வேண்டும் என்று மஹ் மாலை முழுவதும் விளையாட்டு அதனை வழக்கப்படுத்திக் கொள் என்றெல்லாம் குழந்தைகளுக்கு தான் அன்றி நாமும் கடைப்பிடித்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும். அனைத்து உயிரினங்களுக்கும் இயல்பாக விரும்பி செயல்படும் ஒன்று விளையாட்டு, உடலுக்கு வலிமையும் சுறுசுறுப்பைத் தரும் கபடி, கொக்கோ கூடைப்பந்து, கிட்டிப்புள், மட்டைப்பந்து, நொண்டி, என்ற சில விளையாட்டுகள் நமக்கு வலிமைத்தரும். அறிவாற்றல் பெருக்க பரமபதம், கட்டம், ஆடுபுலியாட்டம் ஏணி விளையாட்டு போன்ற மனவலிமை மற்றும் தன்னம்பிக்கை வளர்க்க உதவிடும் தன்னிச்சையாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விளையாட்டு பம்பரம் சுழற்றுதல். இதனை இரா. ரவியின் கருத்துகளாக

**"ஒரு சாட்டை**
**இரண்டு பம்பரங்கள்**
**மனம் இருந்தால் சுற்றலாம்!"[17]**
**"சிறுவயதில் மட்டுமல்ல**
**இப்போது சுற்றினாலும்**
**தொற்றி கொள்ளும் மகிழ்ச்சி"[18]**

பம்பர விளையாட்டினைப் பாடல் வரிகளின் மூலமாக தன் மகிழ்சசி விளைவித்துள்ளார். இன்றும் ஆடினாலும் மகிழ்ச்சி உருவாக்கி கிறு கிறு வென்றுதீண்டும் சாட்டை வரை அமைதியாக சுற்றும் ஒரு சாட்டை மூலம் இரண்டு பம்பரங்கள் சுழற்றி விடலாம் இது ஒற்றுமையை பிரதிபலிக்கிறது. மேலும் சங்ககாலத்தில் ஏறுத்தழுவுதல் மடலேறுதல் போன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆண்கள் ஏறுத்தழுவுதல் விளையாட்டு சிறப்புமிக்கதாக

உயர்ந்துள்ளது இன்று வரை அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு சிறப்பிடம் பெற்றுள்ளது. தமிழரின் வீர விளையாட்டாக இடம் பெற்றுள்ளது.

**"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே, ஆய மகள்**
**அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை**
**நெஞ்சிலார் தோய்தற்கு அறிய உயிர் துறந்து**
**நைவாரா ஆய மகள் தோள்"[19]**

கலித்தொகையில் முல்லைக் கலிப் பாடல்களில் ஏறுதழுவுதல் காட்சிகளை நல்லுருத்திரன் பாடியுள்ளார். காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயர்மகள் அடுத்த பிறவியில் கூட கணவனாக ஏற்க மாட்டாள் என்ற கருத்தை கலித்தொகை அடிகளில் எடுத்துரைக்கின்றன. அஞ்சாமல் காளையன் கழுத்தில் உள்ள கொண்டையான திமிலை முறியும் படி செய்து உயிர் விட்டாலும் ஏறு தோள் ஆயர்குடி பெண்டீர் ஏற்கொள்ளவார் ஏறுவை அடக்கிய பின் திருமண நிகழ்வை நிகழ்த்துவதே ஆயகுல வழக்கமாக இடம்பெறுகிறது.

மேலும் இரா. ரவியின் வரிகளில்

**"சின்னப்பாவை**
**பறக்கிறாள்**
**சிறகின்றி'[20]**
**"இப்படியே இருந்து விட்டால்**
**துன்பம் இல்லை**
**வாழ்வில்"[21]**

எனப் பாடியுள்ளார் சிறுமியாக இருக்கும் போதே காலை தூக்கி குதித்து விளையாடும் போது வானில் பறப்பது தோன்றும் மகிழ்ச்சி எண்ணிலடங்கா சிறுமியாக இருந்து விளையாடிக் கொண்டிருந்தால் வாழ்வில் எந்த துன்பம் வருவதில்லை என்று பெண்ணின் நிலையைக் குறித்து கவிஞர் விளக்கியுள்ளார் வாழ்கைக்குப் பயிற்சியளிக்கும் காலமாக விளையாட்டு அமைவதனைக்காண முடிகிறது.

**சாதனை இரா. ரவியின்**

"ஆணும் பெண்ணும் நிகரென்ன கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்ற பாரதிதாசனின் வரிகளுக்கு இணங்க இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் சாதனை படைக்கின்றனர். தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளுகையை யுடையவர்கள் பெண்கள் இருபதாம் நூற்றாண்டில் பெண்கள் வியக்கும் வகையில் திகழ்ந்த்துள்ளனர்.

**"கற்போர்கள் வியக்கும் வகை இந்நாள்**
மட்டும்
**கதியற்றுக்கிடஞ்சிட்ட அடியேனுக்கு**
**மற்போரும் விற்போரும்**
**வாளின் போரும்**
**வளர் கலைகள் பலப்பலவும்**
**சொல்லித்தந்தீர்"[22]**

பாரதிதாசனின் கவிதை வரிகளில் தாயாக இருக்கும் பெண் தன் மகனுக்கு அனைத்து வித்தைகளையும் கற்றுக் கொடுப்பதற்கு கிழவன் வேடத்தில் வந்த வீரத்தாயான விஜயா சுதர்மனுக்கு மற்போர், வில் போர், வாள்போர் போன்ற போர்க்களைக் கற்றுக்கொடுக்கிறாள். அதுவும் மிகப் பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது மேலும்

**"காற்றை விட கடும் வேகம்**
**கொண்டது பெண்களின் எண்ணம்'[23]**

என்ற ஷேஸ்பியரின் வாக்கினை மெய்ப்பிக்கும் வண்ணம் இன்று காற்றோடு காற்றாக பைலட் ஆகப் பறந்து கொண்டிருக்கின்றனர் மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும் என கவிமணி அழகிய வரிகளில் பெண்ணின் பெருமை எடுத்து கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பெண்ணாவள் அகிலத்தையே ஆளும் சக்தி வாய்ந்தவள். மேலும் இரா.ரவின் கருத்துக்கள்

**"ஆணிற்கு பெண் சமம் என்றனர் இல்லை**
**ஆணை விட பெண்னே உயர்வு என மெய்ப்பித்தாய்"[24]**

**"வரலாற்றில் உன் பெயர் பதித்தாய் சிந்து**
**வெற்றிப்பெற்று வீரமுடன் வளம் வந்தாய்"[25]**

**"கல்பனா சாவ்லாஇ சுனிதா வில்லியம்ஸ்**
**விண்வெளியில் நிகழ்த்தினார்கள் சாதனை"[26]**

எனக் கவிதைகளில் பெண் சாதனை விவரித்துள்ளார். ஒலிம்பிக் போட்டியில் சிந்து வெற்றி வாகை சூடினாள். சாவ்லா விண்வெளி வீராங்கனையாக கால் பதித்துள்ளார்கள். பெண் ஆனவள் மெல்லினம் ஆக அல்ல வல்லினம் என்று மெய்ப்பித்து உள்ளார். இன்றும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள் இருப்பினும் போராளியாக போராடி சாதனை புரிகிறார்கள். அன்றைய காலம்முதல் இன்று வரை பெண்ணானவள் சாதனையாளர்களாக வலம் வருகின்றனர். பெண் பிள்ளை என்றால் கள்ளிப் பாலை ஊற்றி கொலை செய்யும் கொடுமை போய் தற்போது பெண் பிறப்பு நம் நாட்டுக்கு பெருமை என்றும் வீட்டுக்கும் பெருமை என்றும் நிலைக்கு வந்துவிட்டது என்ற பெருமையை அடைந்துள்ளது வரும் காலத்தில் நாடு வல்லரசாக மாறுவதற்குப் பெண்ணின் முக்கிய பங்கு இடம் பிடிக்கும் என்பதைத் தெரிவிக்கப்படுகிறது இதற்குக் காரணம் காலம் காலமாக வீட்டை மட்டுமே தூய்மையாக வைத்திருக்கும் காலம் போய் பெண் தற்காலத்தில் நாட்டையும் சுத்தம் செய்யும் காலம் வந்து விட்டது பாரதியாரின் பாடல் வரிகள்

**"வீட்டுக்குள்ளே பெண்ணை புட்டிவைப்**
**போம் என்ற**
**விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"[27]**

இந்தப்பாடல்வரிக்கேட்ப பெண்ணைப் புட்டி வைத்த காலம் போய் நாட்டுக்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளனர். துப்புரவு பணியாளர் பெண்களும் இணைந்து தூய்மை பணி செய்து வருகின்றனர். வயல்வெளிகளில் அயராது உழைக்கும் பெண்களும் வணக்கத்திற்கு உரியவர்கள் சாதனைப் பெண்மணியாக 2047 ஆண்டு நாடு வல்லரசாக மாறும் பெண்ணின் மகத்துவம் பெருமையும் திறமையும் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. இப்போது பெண் நிலையை சமூகத்தின் பெருமை ஒன்றி வருவதை இவ்வாய்வு விளக்கியுள்ளது.

## தொகுப்புரை

பெண்கள் நாட்டின் கண்களாக திகழ்கின்றனர். கல்வி, தாய்மை, பெண் சிசுக்கொலை, விளையாட்டு, சாதனை போன்ற நிலையிலும் வளர்ச்சி முழுமையாக பெறாவிடினும் முயன்று சாதனை புரிகிறார்கள். பெண்மை யில்லா வாழ்வில் மென்மை இல்லை சங்க காலத்திலும் பெண்கள் கல்வி கற்றுப்பல துறைகளில் விளங்கியுள்ளனர். நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நடையும் என்னும் பாரதி வரிக்கேட்ப உருவாக்கிக் கொண்டே வருவதையும் கவிஞரின் எழுச்சி மிகவும் ஹைக்கூ கவிதைகள் மூலம் கூறப்பட்டுள்ளது இவ்வாய்வுக் கட்டுரை மூலம் பெண்களின் அக்காலம் முதல் இக்காலம் வரை நடைமுறையாக செயல்படும் விதத்தினை தொகுக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்ணிற்கு ஏற்படும் கொடுமைகள், நிலை, சாதனைகள் போன்றவைகளை விளக்கி முடிவு கொண்டு வரப்படுகிறது. இருப்பினும் பெண் வருங்காலத்தில் எல்லாவித வளங்களும் பெற்று உயர்ந்து பண்பினை பெறுவதற்கு எந்தவித ஐயமில்லை. என்றாலும் பெண் விழிப்புணர்வுடனும், அறிவாற்றல் மிக அவசியமாக ஒன்றாக கவனிக்கப்படுகிறது. கவிஞரின் கருத்துகளில் பெண்களின் நிலை சிறப்பாகக் கூறி இவ்வாய்வினை நிறைவு படுகிறது மேலும் எதிர்காலம் பெண்களின் கையில் என்றும் கவனத்துடன் செயல்பட வேண்டிய ஒன்றாக அவசியப்படுகிறது.

## துணை நூற்பட்டியல்

1. ஹைக்கூ 500 - 32 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002

2. கவிச்சுவை - 74 ப.எண் வானதி பதிப்பகம், சென்னை-600002
3. பாரதிதாசனின் கவிதைவரிகள
4. ஹைக்கூ 500 - 25 ப.எண் வானதி பதிப்பகம், சென்னை-600002
5. மேலது
6. மேலது
7. மேலது - 27 ப.எண்
8. கவியமுதம் - 110 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
9. மேலது -110 ப.எண்
10. பாரதிதாசனின் வரிகள்
11. கவியமுதம் - 107 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
12. மேலது
13. மேலது
14. மேலது
15. மேலது
16. பாரதியாரின் பாடல் வரிகள்
17. ஹைக்கூ 500 - 70 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
18. மேலது
19. கலித்தொகை- 103(63-67)
20. ஹைக்கூ 500 - 72 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
21. மேலது
22. பாரதிதாசனின் கவிதைகள் - வீரத்தாய் (3)
23. ஷேஸ்பியரின் கவிதை வரி - இணைய தமிழ்
24. வெளிச்ச விதைகள் - 108 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
25. மேலது
26. கவியமுதம் - 105 ப.எண் வானதி பதிப்பகம் சென்னை-600002
27. பாரதியாரின் பாடல் வரிகள்